5. சட்ட முன்வடிவுகள் (அறிமுகம்)—தொடர்ச்சி.

(ஆ) நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு, 1990.

திரு. எல். கணேசன்: (முதலமைச்சரின் ஆட்சிமன்றச் செயலர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''தமிழ்நாடு 1990 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்டமுன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

திரு. எல். கணேசன் : (முதலமைச்சரின் ஆட்சிமன்றச் செயலர்) : இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

6. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) நிதி ஒதுக்க சட்டச் முன்வடிவு, 1990 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1990 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளவும் ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

8. மொழிப்போர் தியாகிகளைப் போற்றி நினைவு கூர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்று மொழிப் போர் தியாகிகள் தினம் என்பதையொட்டி ஒரு செய்தி:

மொழிக்காகத் தங்களைத் தந்து தியாக
முத்திரை குத்தியோர் பல்லோர்
வழித்தோன்றல் வாழ்வாங்குவாழ தங்கள்
வாழ்வையே ஈந்தவர் நல்லோர்
எழிலான தமிழ்மொழி சிறக்க நாம்
எல்லோரும் பணியாற்ற வேண்டும்
மொழிக்காக இன்னுயிர் ஈந்தோர் தம்மை
முறையாக நாம் போற்ற வேண்டும்.

1990 சனவரி 25]

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, நாளை மறுநாள் (27–1–1990) காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை பிற்பகல் 13-03 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

70. தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் 1988–89 ஆம் ஆண்டிற்கான பதினெட்டாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

71. தமிழ்நாடு ஆதி திராவிடர் மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் 1984–85ஆம் ஆண்டிற்கான பதினோராவது ஆண்டறிக்கை [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

72. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் 1983–84ஆம் ஆண்டிற்கான பத்தாவது ஆண்டறிக்கை [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

73. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் 1985-86ஆம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை மற்றும் கணக்குகள் (தமிழ்நாடு 1959ஆம் ஆண்டு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 18/1959) 29 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

74. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் 1986–87ஆம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை மற்றும் கணக்குகள் [தமிழ்நாடு 1956ஆம் ஆண்டு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 18/1959) 29 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].